
ராணி காமிக்ஸ்
பழிக்குப்பழி வாங்கும் பலே பாண்டியன் !
கொலைகாரன் பேட்டை
ரூ.5

Fans made not for sale

ராணி காமிக்ஸ் — 459
(மாதம் இருமுறை இதழ்)

ஆகஸ்டு 1, 2003.

பழிக்குப் பழிவாங்கும்
பலே பாண்டியன்!

# கொலைகாரன் பேட்டை


பாபா ஒரு முதியவர். அவர் பழைய படம் ஒன்றை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.
பிங்கியிருந்தால் இன்று இருபது வயதுக் குமரியாக இருப்பாள்!
சவிதா! நீ இல்லாமல் என் வாழ்க்கையே இருண்டுவிட்டது!
வா, பாண்டியா...
என்ன பார்த்துக் கொண்டிருந்தீர்கள், பாபா?
என்னைப் பார்த்ததும் ஏன் மறைத்துக்கொண்டீர்கள்?
அது... அது...


அது ஒன்றுமில்லை, பாண்டியா!
என்னிடம் சொல்லக்கூடாத இரகசியமா, பாபா?
இது என் வாழ்க்கையின் இரகசியம்!
என்னிடம் சொல்லக் கூடாது என்றால் வேண்டாம்!
என் மீது உங்களுக்கு அவ்வளவுதான் நம்பிக்கை போலிருக்கிறது! நான் போகிறேன்!


நில், பாண்டியா! உன்னிடம் எதையும் மறைக்க வேண்டியதில்லை.
பாபா படத்தைக் காட்டினார்.
இவள் என் மனைவி, சவிதா. இவள் என் மகள், பிங்கி.
இவர்கள் இருவரும் இப்போது எங்கே இருக்கிறார்கள்?
அவர்கள் இருவரும் இப்போது இல்லை! அது ஒரு துயரக் கதை!
சொல்லுங்களேன்! உங்கள் துயரத்தில் நானும் பங்குகொள்ளுகிறேன்!


பாபா ஒரு சர்க்கஸ் கம்பெனி நடத்திக்கொண்டிருந்தார் ஒரு நாள்...
கூப்பிட்டீர்களா, பாஸ்.
ஆம், சுகால். நான் ஒரு வாரம் குடும்பத்துடன் சிம்லாவுக்குப் போகிறேன். நீ பார்த்துக்கொள்!
உன்னை நம்பித்தான் எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போகிறேன். நல்லபடி பார்த்துக்கொள்.
பாபா போய்விட்டார்! நான் முதலாளி ஆகும் நாள் வந்து விட்டது!


அன்று மாலை சர்க்கஸ் நடந்தது.
அடுத்து புலிகளின் சாகசம்!
புலி வரப் போகுது!
புலி என்றாலே எனக்குக் கிலிதான்!


சுகால், புலி மீது ஏறி வந்தான்!
இந்தப் புலிதான் எனக்குக் குதிரை!


ஆடு புலியே ஆடு!
லைலா போல ஆடு!


எல்லோரும் ஜோரா
கை தட்டுங்க!


பிரமாதம்!
ஓ... அம்மாடீ
ஒரு ரசிகர் மட்டும் கோபப்பட்டார்!
புலிகளை இப்படிக் குரங்கு போல ஆட்டி வைக்கிறானே!
அவர் ஒரு முட்டையைத் தூக்கி எறிந்தார்!
இந்தா உனக்குப் பரிசு!
முட்டை சுகால் முகத்தில் அடித்தது!
யார் எறிந்தது?
டப்...


சுகால் கொதித்தான்!
உன்னைச் சும்மா விடமாட்டேன்!


சர்க்கஸ் காட்சி முடிந்தது!
ரொம்ப நல்லா இருந்தது!


சுகால் இன்னும் கொதித்து கொண்டிருந்தான்.
அவனைச் சும்மாவிடக் கூடாது!
எல்லோரும் வெளியில் வந்துகொண்டிருந்தார்கள்!
அதோ, அந்த ஆள்தானே!
சுகால் கோபத்துடன் வந்தான்.
அவனைக் கடித்துக் குதறிவிடு!
ஆ! புலி வருகிறது!


நீதானே என்
மீது முட்டை
எறிந்தது?
ஆமாம்! பிராணிகளை
இப்படி வதைக்கக்கூடாது!


இப்போது உன்னை
வதைக்கப்
போகிறேன்!


புலியை ஏவிவிட்டான்!
அவன்தான், விடாதே!
கொர்...
ஆ...!


அவர் புலியுடன் கட்டிப் புரண்டார்!
மனிதன்தான் புலியை வதைக்கக்கூடாது!
ஆனால், புலி, மனிதனை வதைக்கலாம்!
ஹ...ஹ...ஹா...


ஏய்! புலியைக் கூப்பிடு!!
என் மீது முட்டை எறிந்தாய் அல்லவா? அதற்குத் தண்டனை!


அந்த ஆள் புலியைப் பிடித்துக்கொண்டார்!
நான் புலிகளுடன் பழகக்கூடியவன்!


புலியை, சங்கிலியால் கட்டிப் போட்டார்!
புலியை ஏவி என்னைக் கொலை செய்ய முயற்சித்ததாக உன் மீது போலீசில் புகார் செய்யப் போகிறேன்!


அதைக் கேட்டு, சுகால் ஆவேசம் கொண்டான்!
நீ உயிருடன் இருந்தால்தானே போலீசுக்குப் போவாய்!
ஏய்... இது சர்க்கஸ் அல்ல!


சர்க்கஸ் கம்பெனி ஆட்கள் ஓடிவந்தார்கள்.
வேண்டாம், சுகால்! அவரை விட்டுவிடு


நீ சும்மாவே முரடன்! கொலைகாரன் ஆகிவிடாதே!
விடுங்கள்! அவனைக் கொல்லாமல் விடமாட்டேன்!


ஒருவர் போலீசுக்கு போன் செய்தார்.
பீப்... பீப்... பீப்...


போலீசைப் பார்த்ததும் சுகால் பயந்துவிட்டான்!
ஆ! போலீஸ்...!


அவன் எறிந்த கத்தி அந்த ஆள் கையில் பட்டது!
ஓடுகிறான், பிடியுங்கள்!


போலீசார் வந்தார்கள்.
என்ன நடந்தது?
அந்த சர்க்கஸ்காரன் என் மீது கத்தியை வீசிவிட்டு ஓடிவிட்டான்!


போலீஸ்; சர்க்கஸ் கூடாரம் முழுவதும் தேடினார்கள்.
இங்கேதான் பதுங்கியிருக்க வேண்டும்!
AJANTACIRCUS
ஆளையே காணோம்! ஓடியிருக்க வேண்டும்!


பாபா திரும்பி வந்தார். நடந்தது கேட்டு அதிர்ந்தார்.
சுகால் எங்கே?
குதிரை லாயத்துள் பதுங்கியிருக்கிறான், பாஸ்!
அவன் குற்றவாளி! அவனைச் சும்மா விடக்கூடாது!


அவர் போன் செய்ய
போலீசார் வந்தார்கள்.
அவன் இருக்கும் இடத்தை நான் காட்டுகிறேன்!
ஓ...!
சுகால் தப்பி ஓட
முயற்சித்தான்!
அவனைப் பிடியுங்கள்!
சுகாலை போலீசார்
பிடித்தார்கள்!
ஒரு அப்பாவியைக் கொலை செய்ய முயற்சித்தாய்!
ஒரு சிறுமி, சாலையைக்
கடந்தபோது...
உனக்கு ஏழாண்டு சிறை தண்டனை கிடைக்கும்!
நான் ஏன் சிறைக்குப் போகிறேன்?


சுகால் ஜீப்பிலிருந்து கீழே குதித்தான்!
நிறுத்துங்க!, நிறுத்துங்க!!


சுகால் தப்பி ஓடினான்!
பிடிங்க... பிடிங்க...
என்னைக் காட்டிக் கொடுத்த பாபாவைப் பழிவாங்குவேன்!


பாபாவின் வீட்டுக்குச் சுகால் வந்தான்
நீ...நீ... யார்?
குழந்தையைப் பிடித்தான்!
அம்மா...
ஏ... அவளை விடு!
கத்தாதே! அடுத்து நீ!
இருவரும் செத்தார்கள்! சாட்சி சொல்லக்கூட ஆள் கிடையாது!
குற்றுயிராகக் கிடந்த சவிதா, எல்லாவற்றையும் எழுதி வைத்துவிட்டு உயிர்விட்டாள்!
என்னாலேயே இதைத் தாங்கிக்கொள்ள முடிய வில்லையே! நீங்கள் எப்படி தாங்கிக் கொண்டீர்கள், பாபா?


அந்தத் துயரத்தில்தான் இப்படிக் கிழவனாகப் போனேன்!
அந்த சுகால் என்ன ஆனான்?
அவனைத்தான் 15 ஆண்டாகத் தேடிக் கொண்டிருக்கிறேன்!
சுகாலை நான் கண்டுபிடிக்கிறேன்! அவன் தண்டனை பெற்றால்தான் என் மனம் ஆறும்!
சுகால் போன்ற கொலைகாரர்கள் வாழுமிடம் எனக்குத் தெரியும், பாபா!


பாண்டியன் உடனே கிளம்பினான்.
அவன் முரடன்! கொலைகாரன்! நீ எச்சரிக்கையாய் இரு!
பாண்டியன் புறப்பட்டான்!
பழிக்குப் பழி!
பாண்டியன், கொலைகாரன் பேட்டைக்குச் சென்றான்!
இதுதான் குற்றவாளிகளின் புகலிடம்!
எவனோ வருகிறான், கங்கா!
போலீஸ் அதிகாரியாக இருக்குமோ, துங்கா?


யார் நீ?
இங்கே ஏன் வந்தாய்?
பாண்டியன், பிளாஸ்டிக் வில்லைகளைத் தூக்கி எறிந்தான்!
இதைப் பொறுக்குங்கடா!
கிண்டலா? நீ உயிருடன் திரும்ப மாட்டாய்!


பாண்டியனைப் பிடிக்கப் பாய்ந்தவன் சறுக்கி விழுந்தான்!
இதுக்குத்தான் போட்டானா?


நீயெல்லாம் எனக்கு ஒரு புழு! முதலில் சரியா கத்தி பிடிக்கப் பழகுடா!
கத்தி எதுக்குடா? ஆ...!
நீ யாரு? ரவுடியா?
இல்லை ரவுடிக்கு ரவுடி!!


பாண்டியன் சட்டென்று ஒரு உதை கொடுத்தான் !
ஆ...!
இந்தா இன்னும் ஒண்ணு !
அய்யோ !
இப்போ தெரிந்துகொள், நான் யார் என்று !
!


நீதான் ரவுடிகளுக்கு ராஜா என்று நினைப்பா?
அம்மா !


நான் நினைத்தால், கொலைகாரன் பேட்டையையே காலி செய்துவிடுவேன் !


என்னை விட்டுவிடு! நீதான் எனக்குக் குரு!
முதலில் திடீர் குத்து– படீர் அடி பழகிக்கொள்!
கும்...
டமார்...
பிழைத்துப் போங்க


பாண்டியன் திரும்பினான்.
என் கால் போச்சு!
என் கை போச்சு!!


பிரமாதமா கொள்ளை அடித்திருக்கிறீர்கள்?
கங்கா, துங்கா இன்னும் வரவில்லை, பாஸ்!


வந்துவிட்டோம், பாஸ்!
கழுத்தை நிமிர்த்த முடியவில்லை


உங்களைத் தாக்கியது யார்?
வேட்டைக்குப் புது ஆளா?


யார் என்றே
தெரியவில்லை,
பாஸ்!
போலீஸ் என்று
முதலில்
நினைத்தோம்!


ஆனால்,
பெரிய ரவுடி!
எங்கே
அவன்?


எல்லோரும் கிளம்புங்க! அவன் எங்கே இருந்தாலும் பிடித்து வாங்க! அவன் தலையை வாங்கணும்!


நம்ம ஆட்கள் மீது ஒருவன் கை வைத்துவிட்டால், அவனை உயிரோடு விடக்கூடாது! விட்டால், நாம் பேல்பூரி விற்கப் போக வேண்டியதுதான்!


புறப்படுங்கடா! கங்கா, துங்கா நீங்களும் கூடப் போங்க, அடையாளம் காட்ட!
சரி, பாஸ்!
ரவுடிக் கூட்டம் ஒரு ஜீப்பில் கிளம்பியது!
நாம் யார் என்று அவனுக்குக் காட்ட வேண்டும்!
நம்ம பாஸ் பற்றி அவனுக்குத் தெரியாது போலிருக்கிறது!
இன்றைக்கு அவன் தலை உருளப்போகிறது!
இந்த ஓட்டலில் இருக்கிறானா என்று பார்ப்போம்!


ரவுடிகளைப் பார்த்து ஓட்டல் மானேஜர் பயந்தார்!
இன்றைக்கு வியாபாரம் போச்சு!
ரவுடிகள் உள்ளே நுழைந்தார்கள்!
சவுக்கியமா?
உங்கள் புண்ணியத்தில் இருக்கிறேன்!


அவர்கள்
கேட்டதைக் கொடு...
சீக்கிரம்...


பிரியாணி
பிரமாதம்!
அவன்
இருக்கிறானா
என்று பார்!


ஆளைக்
காணோம்!
சரி, சாப்பிடுங்கள்,
வெளியே போய்த்
தேடுவோம்!


உன்னை யார் டீயில் ஏலக்காய் போடச் சொன்னது?
அது ஏலக்காய் அல்ல, ஈ!


டீ கப்பில் யானையா மிதக்க முடியும்?
என்னது, ஈயா?


கிண்டல் பண்ணுகிறாயா? உன் கழுத்தைத் திருகி, டீ கப்பில் மிதக்க விட்டுவிடுவேன்!
அய்யோ...
ஓட்டலை சூறையாடுங்கடா!
மன்னித்துக்கொள்ளுங்கள்! சர்வர் ஒரு காமெடி நடிகர்!
ரவுடிகள்! ஓடுங்க!


அப்போது பாண்டியன் வெளியில் ஒரு கடையில் நின்றுகொண்டிருந்தான்!
பட்டப்பகலில் ரவுடிகள் ராஜ்ஜியம் ஆகிவிட்டது!
இதை வளர விடக்கூடாது!
பாண்டியன், ஓட்டலுக்குப் போனான்.
நிறுத்துங்க!
போலீஸ்!
நீ யாருடா, எங்களை அதிகாரம் பண்ண?
ஏய்... அவன்தான்! அவன்தான்!! அவனேதான்!


நாங்கள்
உன்னைத்தான்டா
தேடிக்கிட்டிருக்கோம்!


நீயே வந்து வசமா
மாட்டிக்கிட்டாய்!
ஒரு தடவை
உதை வாங்கினது
போதாதா?


அத்தனை
அடிபட்டும் உங்களுக்குப்
புத்தியில்லையே!
அடி!
கொல்லு!
பாண்டியனை சுற்றி
வளைத்தார்கள்!
வசமா
மாட்டிக்கிட்டான்!
பாண்டியனைப் பிடிக்கப்
போனவர்கள் மோதிக்
கொண்டார்கள்!
ஆ...!


உங்களுக்குப் பணம் வேண்டுமா?
பொறுக்கிக் கொள்ளுங்கள்!
என்ன அது?
பிளாஸ்டிக் வில்லைகள்!
பழைய தந்திரம்!
அவனைப் பிடிக்க முடியுமா?



ஓட்டல் மானேஜர் தலையில் அடித்துக்கொண்டார்!
எல்லாம் நொறுங்கிப் போச்சே!
ஓட்டல்காரருக்குப் பணம் கொடு!
அய்யோ... ஆ...!
உனக்கு எதுக்கு இரண்டு கை?


துங்கா! என்
பையிலிருந்து கத்தியை
எடுத்து வீசு!
கத்தியை வீசினான்!
சதக்...!
ஆ...!


அப்போது மூவரும் பாண்டியன் மீது பாய்ந்தார்கள்!
கொல்லு!
ஆ...!
பாண்டியன் கத்தியைப் பிடுங்கி வீசினான்.


ஒருவன் கீழே சாய்ந்தான்.
செத்தேன்!


கொன்னுட்டான்!
என் ஓட்டல் கொலைக் களமாகி விட்டதே!


முனி! நம்ம ஆளைக் கொன்னுட்டான்!
உனக்கும் அந்தக் கதிதான்!
சைக்கிள் செயின்!
இல்லை பெல்ட்!
பாண்டியன் ரவுடிகளைக் கட்டிப்போட்டான்!
போலீஸ் வரும்!


அவர்கள் பையிலிருந்த புணம். நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்!
வேண்டாம்! என்னை அடித்து நொறுக்கி விடுவார்கள்!


மீண்டும் உங்களிடம் வரவே மாட்டார்கள்!


அவர்கள் கம்பி எண்ணப்
போய்விடுவார்கள்!
மெய்யாவா?


பாண்டியன் கிளம்பினான்!
நீங்கள் தெய்வம் போல வந்து என்னைக் காப்பாற்றினீர்கள்!
ஆபத்தில் இருப்பவர்களுக்கு உதவுவதுதான் மனிதத்தன்மை!


அவர்களை ஜீப்பில் ஏற்றிக்கொண்டு பாண்டியன் கிளம்பினான்!
அந்த மரத்தில் மோதி உங்கள் எல்லோரையும் கொல்லப் போறேன்!
அய்யோ... வேண்டாம்!


நீங்கள் எத்தனை பேரை துடிக்கத் துடிக்கக் கொன்றிருக்கிறீர்கள்?


திடீர் என்று
நிறுத்துங்க!
PHILIPS
என்ன வேண்டும்?
ரவுடிகளுக்கு சரியான பாடம் கற்பித்தீர்கள்!
நீங்கள் யார்?
கர்ணா உங்களைப் பார்க்க வேண்டும் என்றார்!


க்ர்ணா யார்?
வந்து பாருங்களேன் !


மாவீரனே ! வா ! வா !
எதிரிக்கு எதிரி நண்ப்ன் !


இவர்தான் கர்ணா
என்னை எதுக்கு அழைத்தீர்கள்?
நீ அடித்த—பிடித்த அத்தனை பேரும் முகமூடியின் ஆட்கள்! முகமூடி என் முதல் எதிரி!
நான் என்ன செய்ய வேண்டும்?
உன் பெயரைத் தெரிந்து கொள்ளலாமா?
அதுக்கும் என் வேலைக்கும் என்ன சம்பந்தம்? செய்யவேண்டியதைச் சொல்லுங்கள்!


முகமூடியை உயிரோடோ பிணமாகவோ பிடித்து. வரவேண்டும்!
நான் பணத்துக்காகக் கொலை செய்யும் அடியாள் அல்ல!


அங்கே ஒரு படம் தொங்கியது.
யார் அவர்?
சுகால் போலத் தெரிகிறதே!


இவன்தான் முகமூடி! என் ஆட்களைக் கொன்று, கொள்ளையடித்து பெரும் சேதம் ஏற்படுத்தி விட்டான்! அவன் படத்துக்கு மார்லை போட்டுப் பார்க்க எனக்கு ஆசை!


நான் அவனைப் பழிவாங்குகிறேன்!
அதற்கு எவ்வளவு விலை வேண்டும்?


அவன் தலைதான் எனக்கு விலை! அவன் எனக்கும் எதிரி! வருகிறேன்!
பலே! பலே!!
பாண்டியன் கிளம்பினான்
கிரிதாரி! அவன் மீது ஒரு கண் வைத்துக்கொள்!
கர்ணா யாருக்கோ போன் செய்தான்!
கர்ணா பேசுகிறேன்!


உன் ஆட்கள் ஐந்து பேர் இப்போது என் பிடியில்!
அவர்களை விடுவிக்க என்ன வேண்டும்?


உன் பிணம்! என் நாய் ரொம்ப நாளா பட்டினி கிடக்கிறது!


உன் வீட்டு மேலே இப்பவே கழுகு வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது, பார்!


நாளையே உன் பிணம் என் வீட்டு வாசலில் கிடக்கும்!


இண்டர்காம் ஒலித்தது!
இப்போது யார்?
கிண்...
யாரோ உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்!
பாஸ் இப்போது பிசியாக இருக்கிறார். நாளை வரச்சொல்லுகிறார்!
??


பாண்டியன் பலவந்தமாக உள்ளே நுழைந்தான்!
நாளை எனக்கு நேரமில்லை, முகமூடி சுகால்!
யார்... யார் நீ?
முதலில் உன் முகமூடியைக் கழற்று!
முகமூடி வெகுண்டான்!
உன் முகத்தையே கழற்றிவிடுவேன், ஜாக்கிரதை.
நீ யார்? என் பெயர் எப்படி உனக்குத் தெரிந்தது?
அதுதான் போலீஸ் ரிகார்டில் இருக்கிறதே!


போலீஸ் ரிகார்டுகள் பார்த்து, நான் உண்மைக் கதைகள் எழுதிக்கொண்டிருக்கிறேன். உன் கதையும் எனக்கு வேண்டும்!
நீ வாயாடியாக இருக்கிறாய்!
நான் காலாடியும்கூட!
ஆ...!
நட! இல்லாவிட்டால், என் துப்பாக்கிக் குண்டு உன் தலைக்குள் போய்விடும்!
வேண்டாம்!


ஏறு, காரில்!


பாஸ்! முகமூடி பிடிபட்டுவிட்டான்!


பாண்டியன் நேராக பாபாவின் வீட்டுக்கு வந்தான்.
பாண்டியா! யார் இந்த முகமூடி?
முகமூடியைக் கழற்றினால் தெரியும்!


அவனது முகமூடியை நீக்கினான், பாண்டியன்!
இப்போது தெரிகிறதா?
ஆ... பாபா!
சுகால்! கொலைகாரன்!


பாவி! ஏன்டா என் மனைவியையும்,, மகளையும் கொன்றாய்?


அந்தத் துயரம் என் நெஞ்சில் இன்னும் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது!
மன்னித்துக்கொள்ளுங்கள், பாபா! எல்லாவற்றையும் மறந்துவிடுங்கள்!


உனக்கு
மன்னிப்புக்
கிடையாது !
ஆ...!


மரணம்தான்
உனக்கு
சரியான
தண்டனை !







ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.
ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

Regd.with the Registrar of Newspaper for India under No. 42576/84 – ISSN 0971-8567

August 1, 2003.

(TAMIL FORTNIGHTLY)

